தேதி: 10-08-2022
O.S. No. 829/2015
பி.வா.சா.1 திரு.ஜீவா
சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
குறுக்கு விசாரணை:

லிவினா மேரி என் மனைவி, என்னுடன் வசிக்கிறார். வழக்குச் சொத்தினை 19.01.2012 தேதி என் மனைவி மற்றும் பைனான்ஸ் நிறுவனத்தினர் அனைவரும் சேர்ந்து ஒன்றாக கிரையம் பெற்ற சொத்து என்றால் சரி. அன்றைய தேதியில் அதே சொத்தினை எனது மனைவியும், பைனான்ஸ் நிறுவனத்தினரும் சேர்ந்து வேலுச்சாமி என்பவருக்கு பவர் ஆவணம் ஒன்றை எழுதிக்கொடுத்தனர் என்றால் சரி. அந்த பவர் ஆவணத்தின்படி தான் வேலுச்சாமி தாவா சொத்தினை இந்த வாதிக்கு 2014-ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. கிரையத்திற்கு பின்னர் வாதி பெயருக்கு பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வேலுச்சாமியிடமிருந்து கணேசன் கிரையம் வாங்கும்போது உங்கள் மனைவி மற்றும் குடும்பத்தார்கள் சொத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரி. கிரையம் பெறும் சமயத்தில் தாவா சொத்தில் எனது மனைவி குடும்பத்துடன் குடியிருந்து வந்ததால் வீட்டினை காலி செய்து கொடுப்பதற்கு கால அவகாசம் கேட்டும், அதுவரை வீட்டிற்கு மாத வாடகை செலுத்திவைப்பதாகவும், வேலுச்சாமி மற்றும் வாதி முன்னிலையில் தெரிவித்தார் என்றால் சரியல்ல. மாத வாடகை ரூ.25,000/- என்று பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பைனான்ஸ் நிறுவனத்திடம் கடன் பெற்றேன் என்றும், அதன் பொறுப்பிற்காக தான அவர் பெயரிலும், எனது மனைவி பெயரிலும் சொத்தினை கிரையம் பெற்றேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் கணேசன் கிரையம் செய்த விபரம் தெரிந்தவுடன் அந்த கிரைய ஆவணத்தை ரத்து செய்யக்கோரி எதிர் கோரிக்கையோ அல்லது தனிப்பட்ட வழக்கோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இன்றைய தேதி வரை கணேசன் பெயரில் உள்ள ஆவணத்தை ரத்து செய்ய சட்ட நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை, ஆனால் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன், கணேசனை நான் இதுவரை பார்த்ததில்லை. நீதிமன்றத்தில் காவல் நிலையத்தில் புகார் அளித்த முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை, ஆனால் புகார் அளிக்கப்பட்டது. காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை குறித்து வழக்கில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் வழக்கறிஞரிடம் நான் கூறிவிட்டேன். காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, அதன் முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய

நான் தயாராக உள்ளேன். வேலுச்சாமி என்பவர் கணக்குகளை எங்களிடம் காண்பிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் எங்களுக்கு தகவல் இன்றி தெரியாமல் சொத்தை விற்றுவிட்டார் என்ற தெரிவித்துள்ளேன். வேலுச்சாமியிடம் கணக்கை ஒப்படைக்கச் சொல்லியோ அல்லது பணம் தரச் சொல்லியோ உரிமையியல் மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை, பேச்சுவார்த்தை நடத்தினோம். நீங்கள் கணேசனிடம் வாடகைக்கு தான் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல, இவ்வழக்கு பொய்யாக புனையப்பட்ட வழக்கு. சொத்தின் சுவாதீனத்தை சட்டப்படி கணேசனுக்கு நீங்கள் வழங்க கடமைப்பட்டவர், வாடகை பாக்கியையும் ரூபாய் 3 லட்சத்தை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாடகைத்தாரர் என்ற முறையில் தான் சொத்தில் குடியிருக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை விற்பனை செய்ததற்கும், நீங்கள் கூறும் பண பரிவர்த்தனைக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, பிரபாரகரன், வேலுச்சாமி, கணேசன் ஆகியோர் பைனான்ஸ் தொழில் செய்கிறவர்கள், கூட்டாளிகள். பிரபாரகரன், வேலுச்சாமி, கணேசன் ஆகியோர் பைனான்ஸ் தொழில் செய்கிறவர்கள் என்று சொல்வது பொய் அவர்களுக்கு இடையே எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கணேசன் யாரையும் சாராத தனிநபர் என்றால் சரியல்ல. அவர் உங்களிடம் முழு கிரையத் தொகையும் கொடுத்து சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

K HARIHARAN

Digitally signed by K HARIHARAN
Date: 2022.08.11 10:13:28 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.